OS: 68/2018

Date: 29.03.2022

பெயர் : குணசேகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1ம் பிரதிவாதி தரப்பில்**

நான் விசாரித்த வகையில் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பும் சொத்து யாருக்கு பாத்தியம் என்பதை தற்போது வரை நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் முருகேசகவுண்டருக்கு பாத்தியம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் தாவா சொத்துக்கள் இதர சொத்துக்கள் முருகேசகவுண்டரின் மகன் பிரகாசம் என்பவருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரகாசம் முருகேசகவுண்டரின் மகன் என்றால் எனக்கு தெரியாது. முருகேசகவுண்டருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்ற விவரமும் நான் தெரிந்துகொள்ளவில்லை. பிரகாசத்திற்கு பூர்வீகமாய் சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து பிரகாசத்திற்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பிரகாசத்தின் முழு பெயர் எனக்கு தெரியாது. பிரகாசத்தின் முழு பெயர் M.சிவப்பிரகாசம் என்றால் எனக்கு தெரியாது. பிரகாசம் மற்றும் M.சிவப்பிரகாசம் வெவ்வேறு நபர்கள் என்றும், நான் சொத்துக்கு உரிமை இல்லாத பிரகாசம் என்பவரிடம் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றதாக சொல்வது சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சக்திவேல் என்பவர் பிரகாசத்தின் பொது அதிகார முகவரிடம் சொத்தை கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பொது அதிகார ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளேனா என்றால் முன்னிலைப்படுத்தியுள்ளேன். நான் அதுபோன்று எந்தவித பொது அதிகார ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ராமமூர்த்தி பிரகாசத்தின் பொது அதிகார முகவர் என்ற முறையில் சொத்தை சக்திவேலுக்கு விற்பனை செய்தது தொடர்பாக ராமமூர்த்தியிடம் இருந்து செல் ரசீது எதுவும் பிரகாசம் பெற்றுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த செல்ரசீது பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த விவரங்களை நான் தெரிந்துகொள்ள நாளது தேதி வரை எவ்வி நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். பிரகாசம் ராமமூர்த்தியை சொத்து தொடர்பாக பொது அதிகார முகவராக நியமிப்பதற்கு எவ்வித அதிகாரமும், முகாந்திரமும் இல்லை என்றும், அந்த பொது அதிகார ஆவணத்தின்

அடிப்படையில் சொத்தை விற்பனை செய்வதற்கு எவ்வித உரிமையும் பிரகாசத்திற்கு இல்லை என்றும், மேற்படி பொது அதிகார முகவர் சக்திவேலுக்கு விற்பனை செய்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் சொத்தின் புல எண்.171/1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3ல் புல எண்.171/3க்கான பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ.3 வழக்கு சொத்திற்கும் இதர ஆவணங்களுக்கும் தொடர்புடையது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக தற்போது வரை என் பெயரில் பட்டா மாறுதல் ஏற்படவில்லை என்றால் சரிதான். பட்டா மாறுதலுக்கு நான் கிரயம் பெற்ற நாள்முதல் தற்போது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலரிடம் மனு கொடுத்துள்ளேன். நான் கொடுத்த மனுவின் நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் கொடுத்த மனுவின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் என்னை விசாரணை செய்தார். பத்திரம் என்பெயரில் இருந்தபோதிலும் அதை கொடுக்க கூடாது என ஆட்சேபித்துள்ளதால் எனக்கு வழங்கவில்லை. பட்டா மறுத்ததால் நான் மேல்முறையீடு எதுவும் தொடரவில்லை என்றால் சரிதான். எனக்கு உரிமை இல்லை என தெரிந்ததால்தான் பட்டா மாறுதல் சம்மந்தமாக நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சுவாதீன ஆவணங்கள் என் பெயரில் மாற்றம் செய்யவேண்டிய நான் வழக்கில் பரிகாரம் எதுவும் கோரவில்லை. நான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும், என் பெயரில் ஏற்பட்ட ஆவணமும் சட்டப்படியானது அல்ல என்றும், எனக்கு வழக்கில் எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்தை காட்டுவதற்கு நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உரிமை இல்லாத நபரிடம் சொத்தை நான் கிரயம் பெற்றதாக சுவாதினத்தில் இல்லை என்பதாலும் தாவா சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 171/1ன் மொத்த விஸ்திரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்து விவரத்தில் மேற்படி 171/1 க்கு உட்பிரிவு செய்யப்பட்டு 171/3 ஆக இருப்பதால்தான் குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் சக்குபந்தி விவரங்களும் தவறானது என்றால் சரியல்ல. சரியான சக்குபந்தி மற்றும் விஸ்திரணம் குறிப்பிடாததால் தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் முருகேசகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அவரது இறப்பிற்கு பின்னீட்டு சொத்துக்கள் அவரது வாரிசுகளான M.S.பிரகாசம் என்கிற சிவப்பிரகாசம் மற்றும் தியாகராஜனுக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு மேற்படி M.S.பிரகாசம் என்கிற சிவப்பிரகாசம் மற்றும் தியாகராஜன் வழக்கின் 2ம் பிரதிவாதிக்கு ஒரு பதிவு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். அந்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 2ம்

பிரதிவாதி 1ம் பிரதிவாதியுடன் ஒரு கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரயம் ஏற்படுத்தி தராததால் 1ம் பிரதிவாதி மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரங்களை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன். 1ம் பிரதிவாதி பெயரில் நீதிமன்றத்தில் தீர்ப்பு ஏற்பட்டுள்ள விவரத்தை நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை சங்கதிகளை நான் தெரிந்துகொள்ளவில்லை என சொல்வது தவறு என்றும், நான் அவற்றை தெரிந்துகொண்டே வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் பெயரில் தீர்ப்பு ஏற்பட்டுள்ளதால் அதை பொறுத்து நான் வழக்கில் எவ்வித விளம்புகை பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு 1ம் பிரதிவாதிதான் உரிமையாளர் என்றும், வழக்கு சொத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் சங்கதிகள் தெரிந்தே நான்தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

**ஒப்பம்/PW1**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**